2017 மார்ச் 22]

68—

மின் கற்றல் மையம்

***3608—திரு. தா.மோ. அன்பரசன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலந்தூர் தொகுதி, நந்தம்பாக்கத்தில் படித்த மற்றும் படிக்கும் இளைஞர்களுக்கு மின் கற்றல் மையம் (e–learning centre) *அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

முற்பகல் 10-55

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

இணையவழி கற்கும் முறையை (Virtual Learning System) *பயன்படுத்தி, தொழிலாளர் நலத் துறையின்மூலம் இளைஞர்கள் போட்டித் தேர்வுகளுக்கான திறனை வளர்த்துக்கொள்ள வாய்ப்பு ஏற்படுத்த மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன்மூலம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை அதிகரிக்க வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவ்வசதியினை வேலைநாடுநர்கள், மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் பயன்படுத்திக்கொள்ளலாம். எனவே, ஆலந்தூர் தொகுதி, நந்தம்பாக்கத்தில் படித்த மற்றும் படிக்கும் இளைஞர்களுக்கு மின் கற்றல் மையம்* (e–learning centre) *தனியாக அமைக்க வேண்டிய நேர்வு ஏதும் எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தா.மோ. அன்பரசன் அவர்கள்.*

திரு. தா.மோ. அன்பரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலந்தூர் தொகுதி படித்த இளைஞர்கள் அதிக அளவில் உள்ள தொகுதியாகும். இத்தொகுதியில் படித்த இளைஞர்கள் வேலையில்லாமல் மிகவும் சிரமப்பட்டு வருகிறார்கள். அந்த இளைஞர்களின் திறனை மேலும் வளர்ப்பதற்காகவும், அவர்கள் போட்டித் தேர்வுகளை எதிர்கொண்டு வேலைவாய்ப்பினைப்*

பெறுவதற்காகவும், மாறிவரும் தொழில்நுட்பத்தின்மூலம் மின்வழி கற்கும் முறையைப் பயன்படுத்தி, ஆலந்தூர் தொகுதி, நந்தம்பாக்கத்தில் சர்வதேசத் தரத்தில் அமைந்துள்ள சென்னை வர்த்தக மையம் அருகில் மின் கற்றல் மையம் (e–learning centre) அமைத்திட வேண்டுமென்று இந்த அரசைத் தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், இதுபோன்ற மின் கற்றல் மையங்கள் தமிழகத்தில் எத்தனை இடங்களில் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன? அவை எந்தெந்த இடங்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலைவாய்ப்பு பெறுவதற்காக பயிற்சி மற்றும் பாடங்களைக் கற்பிக்க இணைய வழி கற்கும் முறை (Virtual Learning System) ஏற்படுத்தப்படும் என 2016–2017 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது அறிவிப்பு வெளியிடப்பட்டது. இந்த அறிவிப்பினைச் செயல்படுத்த ஏதுவாக அம்மா அவர்களின் அரசால் ரூ.1 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இணைய வழி கற்கும் முறையை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இதனைப் பயன்படுத்தி மாணவர்கள் மற்றும் வேலைநாடுநர்கள் போட்டித் தேர்வுகளுக்கான திறனை வளர்த்துக்கொள்ள வாய்ப்பு ஏற்படுத்தப்படும்.

மேலும், இணைய வழி கற்கும் முறையினால் சென்னை நந்தம்பாக்கத்திலுள்ள மாணவ, மாணவியர் மற்றும் வேலைநாடுநர் ஆகியோர் மட்டுமல்லாமல், தமிழ்நாட்டிலுள்ள பின்தங்கிய கிராமப்புற வேலைநாடுநர்களும் தரமான பாடங்களைக் கற்க இயலும். அம்மா அவர்களின் தமிழக அரசு மாணவ, மாணவிகளுக்கு வழங்கியுள்ள இலவச மடிக்கணினியைப் பயன்படுத்தி பாடங்களைப் பதிவிறக்கம் செய்துகொள்ளும் வாய்ப்பும் உள்ளது. எனவே, ஆலந்தூர் தொகுதி, நந்தம்பாக்கத்தில் படித்த மற்றும் படிக்கும் இளைஞர்களுக்கு மின் கற்றல் மையம் (e–learning centre) தனியாக அமைக்க வேண்டிய நேர்வு ஏதும் எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தா.மோ. அன்பரசன் அவர்கள்.

2017 மார்ச் 22]

திரு. தா.மோ. அன்பரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலந்தூர் தொகுதி சென்னை புறநகரை ஒட்டிய வளர்ந்துவரும் தொகுதியாகும். இந்தத் தொகுதியிலுள்ள படித்த இளைஞர்கள் மற்றும் படிக்கும் மாணவ, மாணவிகள் மின் வழிக் கற்றல்மூலம் பயின்று, தங்கள் திறனை மேலும் வளர்த்துக் கொண்டு, போட்டித் தேர்வுகள்மூலம் வேலைவாய்ப்பை எளிதில் பெற முடியும். இதற்காக கடந்த நிதி ஆண்டில் 1 கோடி ரூபாயை அரசு ஒதுக்கியிருக்கிறது என்று மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். எனவே, நந்தம்பாக்கத்தில் ஒரு மின் வழி கற்றல் மையம் அமைக்க வேண்டுமென்று தங்கள் மூலமாக அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* Virtual Learning System *மூலமாக* e–learning centre–*ல்* video lectures online *மூலமாகவும்,* offline *மூலமாகவும் மாணவர்களுக்கு கற்பிக்கதரப்படும். அதுமட்டுமல்லாமல், நீங்கள் குறிப்பிட்டது போன்று,* e–content competitive exams–*போட்டித் தேர்வுகளுக்கான அனைத்து* study materials–*ம் அந்த* e–content–*ல் அமையும்* e–book–digitisation of books-*ம் அந்த* Virtual Learning System–*ல் அமையும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

வினா வரிசை எண் 69, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மூர்த்தி, மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

69—

மாணவர் விடுதி

***4515—திரு. கே.எஸ். மூர்த்தி:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—